# கெகிராவ பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கெகிராவ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | - | 7,680 | - | |
| | -மேற்படி- | 01 | - | - | - | 7,680 |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் | 03 | - | - | 79 | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகரித்துக் காட்டுதல்கள் -மேற்படி- | 04 | 1,081 | - | - | - |
| (இ) | நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபாடுகள் | 07 | - | - | 925 | - |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 02 | - | - | 18,017 | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,367,596 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 10,195,486 ஆக இருந்தது.

### 1.3.3 தெளிவுபடுத்தப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையிடமிருந்த காணி மற்றும் கட்டிடங்கள் தவிர நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 25,252,111 ஆக இருந்ததுடன், அதற்குச் சமமான காணப்பட வேண்டிய மூலதனப் ஈடுபாட்டிற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 42,349,732 ஆனமையால் அக்கணக்குகளிற்கிடையே ரூபா 17,097,621 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை பங்களிப்புப் பணம் ரூபா 3,517,277 ஆனது ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், உதவுதொகை செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்களின் விபரங்களும் பிரதேச சபையில் சேவைபுரிந்த காலமும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 இலிருந்து 09 வருடங்கள் வரை பழைமையான 18 வேலைகளுக்குரிய நிறுத்தி வைத்தல் பணமான ரூபா 1,767,034 ஆனது 2010 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் உரிய வேலைகளில் குறைபாடுகள் காணப்படுமாயின் அவற்றை ஒப்பந்த காரரை அழைத்து பூர்த்தி செய்து கொடுப்பனவுகளைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததன் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 05 வருட காலத்தினை விஞ்சிக் காணப்பட்ட பொக்குன கடன்கொடுத்தோர் மீதி ரூபா 647,095 ஆக இருந்தது. நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற இத் தொகையினை இணங்காண்பதற்கோ அல்லது உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 39,627,094 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.6 போலியான சொத்துக்கள்

ஐந்தொகையில் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் காட்டப்பட்ட 02 விடயங்களுக்குரிய ரூபா 24,120 பெறுமதியான சொத்துக்கள் பிரதேச சபையிடம் காணப்படவில்லை.

### 1.3.7 இணக்கமிண்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி** | |
| இல. 207 | களஞ்சிய மற்றும் மூலப்பொருட்கள் வழங்கலின் போது இயலுமான வரையில் பொதுப்போட்டியின் பிரகாரம் வழங்குனர்கள் தெரிவு செய்யபட வேண்டிய போதிலும் 04 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 417,498 பெறுமதியான வழங்கல்கள் சம்பந்தமாக அத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| (i) நி.பி 189 | மதிப்பிழந்த ரூபா 29,101 பெறுமதியான 13 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 245 | ரூபா 5,715 பெறுமதியான 5 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,263,728 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,172,100 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 2,223 | 4,079 | 3,714 | 2,025 | 1,281 | 2,241 |
| (ii) | வாடகை | 3,663 | 1,594 | 661 | 1,088 | 1,019 | 145 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,883 | 1,700 | - | 1,532 | 1,200 | 332 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,826 | 14,862 | 5,757 | 25,374 | 29,544 | 7,298 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் 02 நீதவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 4,146,030 ஆன தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,257,224 ஆன முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 நிலுவைக் கேளிக்கை வரிகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 276,844 ஆன நிலுவைக் கேளிக்கை வரித்தொகையானது உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.5 ஆதனவரி

சபை அதிகாரப் பிரதேசத்தினுள் 2004 இன் போது செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனவரி அறவீடுகள் 2010 சனவரி மாதத்திலிருந்து அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் அம்மதிப்பீடுகள் இது வரையில் 07 வருடங்கள் கடந்திருந்ததுடன் அச் சொத்துக்கள் நவீன மயப்படுத்தப்பட்டிருந்தமை கடிதக் கோவைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 146 ஆவது பிரிவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட மதிப்பீட்டினை அமுல்படுத்துவதற்காக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறான | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறான | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 22,050 | 19.797 | 2,253 | 22,040 | 18,512 | 3,528 |
| ஏனையவை | 81,000 | 80,324 | 676 | 10,946 | 3,921 | 7,025 |
| உப மொத்தம் | 103,050 | 100,121 | 2,929 | 32,986 | 22,433 | 10,553 |
| மூலதனச் செலவினம் | 15,000 | 90,489 | (75,489) | 11,300 | 33,508 | (22,208) |
| மொத்தம் | 118,050 | 190,610 | (72,560) | 44,286 | 55,941 | (11,655) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (அ) | பதவி நிலைத்தரங்கள் | 02 | 02 |
| (ஆ) | இரண்டாம் தரங்கள் | 19 | 17 |
| (இ) | ஆரம்ப தரங்கள் | 61 | 48 |
| (ஈ) | வேறு (அமைய / தற்காலிக) | --- | 10 |
| | | 82 | 77 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 147,750 பெறுமதியான சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,771,212 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,643 ஆக இருந்தது.

### 2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரிசோதனை / மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 41,341,042 ஆக இருந்தது.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் வடமத்திய மாகாண கிராம அபிவிருத்தி செயற்திட்ட நிதி அனுசரணையிலிருந்து ரூபா 3,980,997 செலவிடப்பட்டு கழிவுப்பொருள் மீள்சுழற்சி நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டில் அதற்காக ரூபா 3,618,563 செலவும் செய்யப்பட்டிருந்தது. இருந்தும் 2010 திசெம்பர் 31 வரையிலும், அங்கு கழிவுப்பொருள் மீள்சுழற்சி நடவடிக்கை ஆரம்பிக்கப்படாதிருந்தமையால் நிர்மாணிப்புக்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) சபையின் ஊழியர்களுக்காக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தவனைப் பணத்தை உரிய தினத்தில் செலுத்தாமையால் ஆண்டின் போது ரூபா 4,492 தண்டப்பணம் செலுத்த நேர்ந்திருந்தது.

## 2.7 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் மக்களின் வசதிக்காக நலன்புரி நடவடிக்கைகளுக்குரிய செயற்பாடுகள் மற்றும் சுகாதாரம், பொது வீதிகள் பொதுப் பயன்பாடு சேவைகளுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 ஒப்பந்த நிருவாகம்

### 2.8.1 நிர்மாணங்கள்

#### (அ) அமுல்படுத்தப்படாத செயற்திட்டங்கள்

2010 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பின்வரும் வேலைகளை அமுல்படுத்தவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| நிதிய மூலம் | | வேலைகள் | மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு |
|---|---|---|---|
| | | | ரூபா |
| ஜாதிகசவிய கமநெகும பன்முகப்படுத்தப்பட்ட | (i) | இஹல புனியள்குளம் பள்ளி வீதிக்கு கொங்ரீட் இடல் | 492,718 |
| | (ii) | கொக்கிராவ மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தின் உள்ளக வீதி நிர்மாணித்தல் | 50,000 |
| | (iiii) | பளுகஸ்வெவ பெந்திவெவ சனசமூக நிலைய திருத்தம் | 40,000 |
| | (iv) | பளுகஸ்வெவ ஹபரண லக்சிறிகம சனசமூக நிலையத் திருத்தம் | 40,000 |
| | | | 622,718 |

**(ஆ) இயந்திர மணி அடிப்படையில் கொடுப்பனவு செய்தல்**

இக்டாட் அறிவித்தல் பிரசுரத்தின் எஸ்சீஏ/1 ஆம் இலக்க ஒப்பந்த வேலைகள் நிபந்தனைக் கோவையின் 56 ஆவது பந்தியின் பிரகாரம் செய்யப்பட்ட வேலைகளை அளவீடு செய்து அவ் அளவிடைகளின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவு செய்ய முடியுமாக இருந்ததுடன் இயந்திர மணியை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்ய முடியாதிருந்த போதிலும் அதனைக் கருத்திற் கொள்வது பின்வரும் வேலைகளுக்காக இயந்திர மணி அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

| திகதி | கொடுப்பனவு உறுதிச்சீட்டு இலக்கம் | விபரம் | செலுத்தப்பட்ட பணம் |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 2010.05.20 | 496 | எம்புல்கஸ்வெவ குப்பை நிலத்தில் குப்பைக் குழிகள் வெட்டுதல் மீற்றர் மணி 40X4,500 | 180,000 |
| 2010.07.27 | 723 | மோட்டர் கிரேடருக்கு கொடுப்பனவு மணி 20.4X3,600 | 73,440 |
| 2010.06.22 | 604 | குப்பைக் குழிகள் வெட்டுதல் டோசர் மணி 76 எக்ஸ்கேட்டருக்கு 61.05 | 372,175 |
| | | | 625,615 |

**2.9 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) கடன்பட்டோர் கட்டுப்பாடு